# பத்திரிக்கை செய்தி

## நிலத்தை உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.25,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கள ஆய்வாளர் மற்றும் ஒப்பந்த ஊழியர் கைது

புகார்தாரர் திரு.புதுமாடசாமி, கங்கை கொண்டான், திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் புதிதாக 27 செண்ட் நிலத்தை கங்கை கொண்டான், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 07.08.2023ந் தேதி வாங்கியுள்ளார். இந்த நிலத்தினை கங்கை கொண்டான் பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும் போது நிலத்தினை உட்புரிவு செய்வதற்காகவும் பட்டா மாறுதல் செய்வதற்காகவும் ஆன்லைன் மூலமாக கட்டணம் செலுத்தி அதற்குண்டான ரசீதுகளையும் பெற்றுள்ளார். இதே போல புகார்தாரரின் தம்பியும் 26 செண்ட் நிலத்தை கங்கை கொண்டான், திருநெல்வேலி மாவட்டத்தில் பத்திர பதிவு செய்துள்ளார். கடந்த 19.09.2023ந் தேதி திருமதி.லிங்கம்மாள், கள ஆய்வாளர் (Field Surveyor) திருநெல்வேலி தாலுகா, பொறுப்பு பிர்கா சர்வேயர், கங்கை கொண்டான், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடம் நிலத்தை உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்க தனக்கு ரூ.30,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின் புகார்தாரர் கேட்டுக் கொண்டதின் பேரில் லஞ்ச பணத்தை ரூ.5,000/- குறைத்து ரூ.25,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருநெல்வேலி மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.09.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.லிங்கம்மாள், கள ஆய்வாளர், பொறுப்பு பிர்கா சர்வேயர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திருமதி.சாந்தி, ஒப்பந்த ஊழியர், லஞ்ச பணம் ரூ.25,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலும் திருமதி.சாந்தி, ஒப்பந்த ஊழியர் அவர்களை சோதனை செய்தபோது அவருடைய பையிலிருந்து திருமதி.லிங்கம்மாள் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ஏற்கனவே பெறப்பட்ட லஞ்ச பணம் ரூ.8,000/- கைப்பற்றப்பட்டது.